உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரணஹு சித்திரை மீ உகூஉ (1944 மெமீ 11 வியாழக்கிழமை) [இல. ௪0

## மகாத்மா காந்தி நூல் நூற்கின்றார்

### வழக்கமான அலுவல்களை ஆரம்பிக்க அவாவுகின்றார்

#### சிலவார காலம் ஓய்வு எடுக்கவேண்டும்

பூனா மே 7

"காந்திஜியின் நிலைமை அநேகமாக முன்போலவே இருக்கிறது" என்று காந்திஜியின் தேகநிலைமை பற்றி டாக்டர் மிஸ். சுசிலாநாயர் விடுத்த அறிக்கையொன்று கூறுகிறது. அது மேலும் கூறுவதாவது:- அவர் நேற்று மாலை வேளையில் அதிக களைப்புற்றிருந்தார். ஆனால் இரவு நன்கு தூங்கினார். இரத்தக் குடிப்பு மிகவும் நிலையற்றதாக இருந்தது. இந்த நிலைமையில் அவரை வெளியிலுள்ளவர்கள் வந்து பார்க்கும் நேரத்தைப் பிற்பகல் 2 முதல் 3 மணி வரைக்கும் 5 முதல் 6மணி வரைக்குமாகக் குறைக்க வேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. அவரைப் பார்க்க வருபவர்கள் நீண்ட நேரம் தங்கியிருக்காமல் விரைவில் சென்று விட்டால் மிகவும் உதவியாக இருக்கும். ஒரே மூறையில் சில நிமிஷநேரத்துக்கு அதிகமாகப் பேசுவது அல்லது வேறுயாராவது பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பது அவருக்கு அதிக களைப்பை உண்டுபண்ணும்.

### சிலவாரகால ஓய்வு வேண்டும்

காந்திஜி அவரது வழக்கமான வேலையை மீண்டும் ஆரம்பிக்கச் சில வாரங்கள் பிடிக்குமென்று நம்பப்படுகிறது. அவருக்கு ஆபத்து இல்லையென்று டாக்டர்கள் அறிவிக்கும்வரை இப்போதைய நிலைமை சம்பந்தமான அவரது அபிப்பிராயங்களும் அவரது எதிர்காலத்திட்டங்களும் வெளியிடப்படமாட்டா.

காந்திஜி நாளைக்கு ஒருவைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு எக்ஸ்ரே செய்யப்படுவாரென்று அறியப்படுகிறது. டாக்டர் கடை நாளை இங்கு வருவாரென்று தெரிகிறது. அவரும் மற்ற டாக்டர்களும் அவரைப் பரிசோதனைசெய்தபின்னர், அவரெங்கு இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பார்கள். அவர் சில தினங்களுக்கு மஹாபலி புரத்துக்குப் போய் இருக்க வேண்டுமென்று ஒரு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்த்து அவருடைய இருதயம் விரிந்திருந்தால் மலைப் பிரதேசம் பொருத்தமாயிருக்குமென்று சொல்லப்படுகிறது. பம்பாய்க்குச் சமீபத்திலிருக்கும் ஜுஹூ என்னுமிடத்தில் அவர் போய்த் தங்கியிருக்கக் கூடுமென்று சொல்லப்படுகிறது.

### அரசியற்கலப்பற்ற சம்பாஷணைகள்

காந்திஜிக்கு இரத்தக் குடிப்பு இருக்கிறது. அத்துடன் அவர் உடம்புக்குச் சிரமம் கொடுக்கக் கூடாதென்றும் டாக்டர்கள் கூறியிருக்கின்றனர். அப்படியிருந்தும் அவர் தமது வழக்கமான அலுவல்களைச் செய்யவும் கூடியவரை நண்பர்களைச் சந்திக்கவும் அவாவுகிறாரென்றும் சொல்லப்படுகிறது. அவரைப் பார்ப்பதற்கு அநேகர் அநுமதி கோரியிருக்கின்றனர். அவரைப் பார்க்கும் நேரம் இப்பொழுது நாளொன்றுக்கு 2 மணியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. சம்பாஷணைகளின்போது காந்திஜி பெரும்பாலும் பிறர் கூறுவதைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார். இடையிடையே இரண்டொரு கேள்விகள் மட்டும் கேட்கிறார். இந்தச் சம்பாஷணைகளில் அரசியல் விஷயம் புகுத்தப்படுவதில்லை. கடுமையாக விவாதித்தால் அவருடைய இரத்தக் குடிப்பு அதிகரிக்கும். காந்திஜியை யாரும் சந்தித்துப் பேசும்போது அவருடைய காரியதரிசி திரு. பியாரிலால் அவர் பக்கத்திலேயே இருக்கிறார். காந்திஜி பத்திரிகை படிக்கிறார். அத்துடன் நூல் நூற்கிறார். இன்று மாலை அவரோடு சம்பாஷித்த ஒரு நண்பர் காந்திஜி ஒரு தலையணையில் சாய்ந்துகொண்டிருக்க வேண்டுமென்றும் அல்லது அவருக்குச் சிரமம் உண்டாகுமென்றும் கூறினார். அதற்கு காந்திஜி இருந்து கொண்டுதான் நூல் நூற்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் நூல் நன்றாயிராதென்றும் கூறினார்.

## காந்திஜி விடுதலைபற்றி மாளவியாஜி

### பெரிய ஆறுதலடைந்து விட்டாராம்

அல்லஹபாத் மே 6—

பண்டித மதன்மோஹன் மாளவியா வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறார்.

காந்திஜி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டாரென்று அறிய நான் பெரிதும் ஆறுதலடைந்தேன். அவர் கைது செய்யப்பட்டிருக்கவே கூடாது. ஒரு பெரிய அநீதியை அரசாங்கத்தார் திருத்திக்கொண்டு விட்டனர். இந்தியர்களுடைய பூரண ஒத்துழைப்பையும் அரசாங்கம் பெறவேண்டுமாயின் ஏனைய தலைவர்களும் விடுதலை செய்யப்படவேண்டும். எல்லாக் காங்கிரஸ் வாதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும். அப்போதுதான் தேசீய அரசாங்கம் ஏற்பட வழியுண்டாகும்.

காந்திஜி சுகப்படும்வரை எல்லோரும் காத்திருக்கவேண்டும்.

## 'கண்ணகி' படத்திற்கு ஆட்சேபம்

சென்னை மே 3—

'சந்திரா' டாக்கீஸின் மானேஜிங் டைரக்டராயிருந்த திரு. எஸ். ராமச்சந்திரன் திரு. எம். எம். மெய்யப்பச்செட்டி டிஸ்ட்ரிப்யூடர் திரு. இளங்கோவன் வசனம் வழுதியவர். திரு. என். எஸ். கிருஷ்ணன் ஹாஸ்யநடிகர் ஆகியோர் மீது திரு. டி. எம். தெய்வசிகாமணி ஆசாரியார் மற்றும் இருபேரும் அவதூறு வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். கண்ணகி என்ற படத்தில் ஒரு 'ஸீன்' விஸ்வகர்ம வகுப்பினருக்குள் மனஸ்தாபத்தை உண்டாக்குவதாகவிருக்கின்றனவென்றும் புராதன அசல் கதையின் ஒருபாகம் இதுவல்லவென்றும் ஆனால் கதையில் விஷமத்தனமாகச் சேர்க்கப்பட்ட ஒருபாகமென்றும் முறைப்பாடு கூறியிருக்கின்றார். வழக்கு 15-ந் திகதி 2-வது மாகாண நீதிபதிமுன் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்படும்.

## இலங்கை விஜயம் பற்றி ராஜாஜி

### இலங்கைவாழ் இந்தியத் தலைவர்களுக்குக் கூறிய புத்திமதி

சென்னை, மே. 7—

டாக்டர். ஸி. ராஜகோபாலாச்சாரியார் இலங்கைச் சுற்றுப் பிரயாணம் முடிந்து திரும்பியதும் பேட்டி கண்டபொழுது பின்வருமாறு தெரிவித்தார்:—

"இலங்கைவாழ் இந்தியர்கள் அவர்களது வருங்கால நிலைமையைப் பற்றி அஞ்சவோ அல்லது கவலைப் படவோ வேண்டியதில்லை. இது அவர்களுக்கு நான் விடுக்கும் செய்தி.

"இலங்கை நிலைமையில் நான் கண்ட ஒரு பிரதானமான அம்சம் என்னவென்றால், தீவு முழுவதிலும் இந்தியர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் மிகுந்த நேச உறவு நிலவுவதுதான்.

"இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சமீபத்தில் நடந்த வாக்கு வாதத்தினால் இந்தியர்களுக்கும் சிங்களவர்களுக்கு மிடையிலுள்ள நல்லுறவு எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

### இந்தியர் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடக்கூடாது

"பிரதானமான சிங்களத் தலைவர்களுடன் நான் நடத்திய சம்பாஷணைகளிலிருந்து இரு நாடுகளுக்கு மிடையில் மிகவும் நியாயமான சமரசம் ஏற்படுவது சாத்தியமென்றே நான் கருதுகிறேன்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு இலங்கைவாழ் இந்தியத் தலைவர்கள் எந்தவிதமான முட்டுக்கட்டைகளையும் போடமாட்டார்களென்று நான் நிச்சயமாக நம்புகிறேன், இந்த விஷயத்தில் அவர்களுக்கு நான் தெளிவான புத்திமதிகளைச் சொல்லியிருக்கிறேன். அவைகளை இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவர்கள் நிராகரிக்க மாட்டார்களென்பதே எனது நம்பிக்கை.

"சிங்கள மந்திரிகள் சிறிது காலத்துக்கு முன்பிருந்த அதே மனோபாவத்துடன் இப்பொழுது இல்லையென்று நினைக்கத் தகுந்த காரணங்களிருக்கின்றன.

அவர்கள் இலங்கைக்குச் சுயவாட்சியளிப்பதைத் தவணையிட்டு, சிறுபான்மையோர் பிரச்னை தீர்க்கப்படவில்லையென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சாக்குப்போக்குச் சொல்ல முடியாதபடி செய்வார்களென்று நான் நம்புகிறேன்.

## முஸோலினி மகன் கைது

லண்டன் மே 7—

முஸோலினியின் மகன் விட்டோரியா ரோமாபுரியில் மாறுவேஷத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு உதவி செய்ததற்காகக் கைதுசெய்யப்பட்டாரென்றும் ஆனால் ரோமாபுரியிலுள்ள பத்திரிகைகள் இதைப்பற்றி ஒன்றும் கூறுது மௌனஞ்சாதித்துவிட்டனவென்றும் ஸ்டாக்ஹோல்மிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

## சுருட்டு விலையை அதிகரிப்பதற்கு எதிர்ப்பு

### சுருட்டுந்தொழிலாளர் சங்கத்தின் தீர்மானம்

யாழ்ப்பாணம் மே 6—

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்தாபனங்களுள் அதிக அங்கத்தவர்களைக் கொண்டதும் அடிமைத்தனத்தை நீக்கல் சுதந்திர உணர்ச்சி ஊட்டல் தொழிலாளர் நலன்கருதி உழைத்தல் முதலிய விஷயங்களில் எல்லா ஸ்தாபனங்களையும்விட மேலாக உழைத்து வரும் அகில இலங்கைச் சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தின் விசேஷ நிர்வாகசபைக்கூட்டம் நேற்றையதினம் மாலை 7 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் பக்கத்தேயுள்ள சங்க மண்டபத்தில் சங்க அக்கிராசனருள் ஒருவராகிய அத்துவக்காத் திரு. வி. சிற்றம்பலம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அப்போது சங்க நிர்வாக அங்கத்தவர்கள் யாவரும் சமுகமாயிருந்தனர்.

அக்கிராசனர் திரு. வி. சிற்றம்பலம் தமது முன்னுரையிற் கூறியவற்றின் சாராம்சம் பின்வருமாறு:-

தொழிலாளர்களாகிய உங்களது பலம் உங்களுக்குத் தெரியவில்லை. மேல்நாடுகளிலுள்ள தொழிற்சங்கங்கள்தான் அந்நாட்டின் அரசியலில் முக்கிய ஸ்தானங்கள் வகித்து வருகின்றன. அதற்குக் காரணம் அச்சங்கங்களின் அங்கத்தவர்களின் ஒற்றுமையேயாகும். "ஒற்றுமையில்" ஒத்தால் வாழலாம்' என்ற உண்மையை நான் இங்கு கூறவேண்டிய அவசியமில்லை. சுருக்கமாகக்கூறின் எல்லா நாடுகளுந் தொழிலாளர்களாகிய உங்கள் போன்றாராலேயே முன்னேற்றமடைந்து வருகின்றது. தொழிலாளர்கள் ஒவ்வொரு நாட்டினதும் முதுகெலும்பு. அந்நாடுகள்போன்று எமது நாடும் முன்னேற்றமடையின் சுருட்டுத் தொழிலாளர்களாகிய உங்களாலேயே முன்னேற்றமடைய வேண்டியிருக்கிறது. ஏனெனில் எமது யாழ்ப்பாணத்தில் அல்ல வடமாகாணத்தில் சுருட்டுத்தொழிலே பிரதானமான தொழிலாகும். வருங்காலம் உங்கள் மேன்மையை எதிர்நோக்கியிருக்கின்றது. ஆதலின் நாட்டின் நன்மையை நாடி உழைப்பதே உங்களது சீரிய நலன். நீங்கள் ஒவ்வொருவரும் நமநாடு உயரிய நிலையடைவதற்கு முயலவேண்டும்.

### சுருட்டுவிலையை அதிகரிக்கக் கூடாது

அதன்மேல் சுருட்டுத் தொழிலாளர்சங்கக் காரியதரிசி திரு. ஆ. துரைராசசிங்கம் ஆற்றியசொற்பொழிவின் சாராம்சம் வருமாறு:—

தொழிலாளர்கள் என்ற முறையில் நாம் யாவரும் ஒரே சாதியினராகவே திகழ்ந்து வருகின்றோம். நாம் ஒன்றுபட்டு ஒன்றுபட்டு முயற்சித்தால் எக்காரியங்களிலும் மிக வெற்றியடையலாம்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண௵
சித்திரைமீ உகூஉ வியாழக்கிழமை


## "வித்தகம் பேசவேண்டாம் பணிசெய்யவேண்டும்"

உணவுப் பொருள் விஷயத்திலே "ஊர்எச்சம் வீடுபட்டினி என்ற விதமாக, உணவுப் பொருள் விருத்தி பேச்சளவிலே விருத்தியாகின்றதன்றிக் காரியத்தளவிலே ஏதும் விருத்தியாகக் கண்டிலேம்; முன்னைக் காலத்தைக்காட்டிலும் இப்பொழுது இந்நாட்டிலே சனங்கள் பல காரணங்களால் அதிகமாக வந்து கூடியுள்ளனரென்பதை உள்ளவாறு சிந்தித்து அக்கூடிய சனங்களுக்கு மேலதிகமான உணவை ஆக்கவேண்டுமென்று முயற்சி செய்வாரெவரையுங் காணேம். "அங்கே காடு திருத்தி வயலாக்கி நெல் விதைக்கப்படுகின்றது; இங்கே வெற்றுத் தரையாகக் கிடந்த நிலத்திலே தோட்டஞ் செய்யப் படுகின்றது, இனி "எமக்கென்ன குறை" என்று ஊசிப்பறையறையாரும் பத்திரிகை வாயிலாக வெளியிடுவாருஞ் சிலர் காணப்படுகின்றனரேயல்லாமல் இங்குள்ள மக்களுக்குச் சீவாதாரமான உணவுப்பொருள்கள் போதிய அளவிற்கு, இலங்கையில் இங்குள்ள மக்களைக்கொண்டு பாதிப் பங்கையதாலும் ஆக்கவதற்கு உண்டோ என்பதை அதிகாரிகளும் அபிமானிகளும் ஆராயவேண்டாமா?

இவ்வூர்க்கு அந்நியராய் இங்கேவந்து உத்தியோகம் பார்க்குஞ் சிலர் இங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையை உள்ளபடி உணராராய், இங்கு எவ்வகையான குறையுமில்லை என்று தம்மனம் போனவாறே பேசவும் எழுதவுந் தலைப்பட்டுக்கொண்டார்கள். "முன்னரைக்காட்டிலும் இப்பொழுது சட்டாசி நோட்டுக்கள் அதிகமாக வழங்கப்படுகின்றன ஆனதால், இலங்கையில் இப்பொழுது செல்வம் அதிகரித்துவிட்டது" என்று இறைக்குச் சிலவாரங்கட்கு முன் ஒரு அபிப்பிராய மனுஷலை வெளியிட்டதை அறிவோம். கடதாசி 'நோட்டு'களுக்கு முன்னரைக் காட்டிலும் பொருள் வாங்கும் ஆற்றல் இப்பொழுது குறைந்துவிட்டதென்பதை அறியப் பெரியார் உணராததில்லை போலும்; மிஸ்ரர். ஹெலடர் எனப்படும் ஒரு தோட்ட முதலாளி தமிழ்நாட்டுக்குச் சில தினங்களின்முன் சிலாபப் பகுதியில் நடந்த தோட்ட முதலாளிகள் கூட்டமொன்றிற் பேசியபோது "இலங்கையிலே வெறுந் தரையாகக் கிடக்கும் இடமெல்லாம் நெல்விளைத்தால் மூன்று கோடியே அறுபது லட்சம் 'புஷல்' கொண்டநெல்லை ஆக்க முடியும்; அப்படியாக்கினால், இலங்கையிலுள்ள மக்களுக்கு வாரம் இரண்டுபடி அரிசி விகிதம் கூப்பன் கணக்கில் தனித்தனி கொடுக்கலாம்' என்று கூறியுள்ளார். வெற்று நிலங்களிலெல்லாம் நெல் விதைத்துப் பயிராக்குவதற்குக் கூலியாட்கள் உண்டா, மூலதனமுண்டா, நீர்வளம் நிலவளமுண்டா, அப்படித்தான் இருந்தாலும் வெற்றுநிலத்தைப் பண்படுத்திப் பயிரிடுதல் அற்ப காலத்தில் இலகுவிற் கைகூடுங் கருமமா என்ற இவைகளைப்பற்றி மிஸ்ரர். ஹெலடர் சிந்தித்திலர். ஒரு தரித்திரன் சிந்தனையில் மூழ்கியிருக்குஞ் சமயத்தில் அவனுடைய மனைவியாள் அவனைப் பார்த்து "என்ன அதிகம் யோசிக்கிறீர்கள்? உங்கள் சிந்தனை என்னவென்பதை எனக்குச் சொல்லக்கூடாதா" என்று ஆவலுடன் கேட்டாளாம்; அப்பொழுது கணவன் நெட்டுயிர்த்து அவளைப் பார்த்து "வேறொன்றுமல்லவடி பெண்ணே, இப்பொழுது மாசந்தோறும் நூறுரூபா அநியாயமாகப் போகிறதே" என்று சொல்லிக் கவலைப்பட்டானாம். "ஐயோ, எப்படி அநியாயமாகப் போகிறது எனக்குச் சொல்லுங்கள்" என்று பின்னரும் மனைவியாள் ஆவலுடன் வினவ, 'அல்லவடி பெண்ணே, என்னிடத்தில் பதினாயிரம் ரூபா முதலிருந்து, நான் அதை வட்டிக்குக் கொடுத்திருந்தால் மாசம் வட்டிப் பணம் மாத்திரம் பத்து வீதம் நூறு ரூபா வருமல்லவா? அப்படியில்லையே எனக் கவலைப்படுகிறேன்" என்று மனைவிக்குச் சொன்னானாம்; இந்த விதமாகவே இருக்கிறது மிஸ்ரர் ஹெலடரின் அசம்பாவிதமான பேச்சு.

இவர்கள்பேச்சு இப்படியாக, இலங்கை மக்கள் பொருட்டு இந்தியாவுக்கு அரிசி வாங்கப் போன சிங்களப் பெரியார் அங்கேதான் குடியேறிவிட்டார், பின்னே போனவர்கள் அரிசி இல்லையாமென்று சொல்லி மீண்டுவிட்டனர். எங்கள் அரசினர் எங்களையும் எங்கள் நாட்டையும் பாதுகாக்கும்படி யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இந்தச் சமையத்தில் அவர்களை நாம் குற்றஞ் சொல்வதை விடுத்து, யுத்த விஷயத்தில் அவர்களுடைய விசுவாசமுள்ள பிரசைகளாகிய நாங்கள் அவர்களுக்குப் பல்லாற்றானுந் துணைபுரிதலே முறையாகும். ஆனால், இங்குள்ள அரசாங்க சபையிலே சனப்பிரதிநிதிகளென்றிருக்கும் பிரபுக்கள் தங்களைப் பிரதிநிதிகளாகத் தெரிந்தனுப்பிய சனங்களின் க்ஷேமலாபத்தைக் குறித்து ஆவன புரிய உழைக்க வேண்டியது அவர்கள் கடனல்லவா! அரசாங்கசபையில் சில தானங்கட்குப் பிரதிநிதியில்லாமற்போக அத்தானங்களை நிரப்புவதற்குப் பிரதிநிதிகளாய் வர முற்பட்டு நிற்கும் அபேட்சகர்கள் சிலர் "என்னைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யுங்கள், நான் உங்களுக்குச் சுயாதீனம் வாங்கித் தருகிறேன். சிங்களரைக்காட்டிலும் தமிழர்களாகிய உங்களுக்கு அதிக சிலாக்கியங்களைத் தேடிவைப்பேன், அவரை விட்டு என்னையே அனுப்புங்கள்" என்பன போன்ற ஆசைவார்த்தை பேசிக் காரியம்பார்க்கப் பிரயத்தனம் செய்கிறார்கள். இவைகளால் இந்த நேரத்தில் இங்குள்ள மக்கள் அடையக்கூடிய பயன் யாதுமில்லை, பிருத்தானிய அரசினர் எங்களுக்கு அளித்துள்ள சுவதந்திரம் இந்த யுத்த காலத்தில் போதியதாகும். இந்த அபேட்சகர்களும் அரசாங்கசபைப் பிரதிநிதிகளும் ஏனைய அபிமானிகளும் இங்குள்ள மக்களுக்கு நேர்ந்துள்ள கஷ்டங்களை ஒழித்தற்காகிய மார்க்கங்களைத் தேடுதல் வேண்டும். "அப்பா என்றால் உச்சி குளிருமா" என்றபடி ஆசைப்பேச்சினால் மக்களின் கஷ்டம் நீங்கப்போவதில்லை.

# உலகம்பலவிதக் கதை

### வெண்ணெ யிருக்க நெய்தேடலாமா!

"எனக்குக் கல்யாணமே வேண்டாம் அம்மா, இப்படியே கன்னியாயிருந்து மரியாதையாகக் காலங் கழிப்பேன்" என்று சிறிது வெறுப்போடு சொன்னாள் மகள். "அப்படியல்ல, மகளே, நீ பெரிய பிள்ளையாகியும் இன்னமும் சிறுபிள்ளைப் புத்தி உன்னைவிட்டுப் போகவில்லை; குமாரக மரியாதையோடிருந்து காலங் கழித்த பெண்ணை நான் என் அனுபவத்திற் கண்டதில்லை; எனக்கும் வயசு 55 வரையிலாகிறது; முந்தி இப்படி யாரும் நித்திய குமாரகக் காலங் கழித்தாரென்று நான் கேள்விப்பட்டதுமில்லை; நீ விவாகஞ் செய்யாமல் எவ்வளவு கட்டுப்பாட்டோடு இருந்தாலும் நெறியோடு காலங் கழித்தாலும், பொல்லாத உலகமடி மகளே, இப்படிப்பட்ட உலகம் உன்னைப் பழிசொல்லும்; அல்லாமலும் உன் அப்பரும் நானும் எந்தக் காலத்தும் உன்னோடிருந்து உன்னைப் பாதுகாத்திருப்போமென்று நினைக்கலாகுமா? நாங்களில்லாத காலத்தில் நீ என்ன செய்வாய், நான் பெற்ற கண்ணே! விசாலாட்சி! இந்தப் பிடிவாதமான எண்ணத்தைவிட்டுவிடடியம்மா, மேலும் மகளே, நீ யெனிலா நல்லாய்ப் படித்த பெண்; உன் படிப்பிற பத்தி ஒன்றுதானும் என்னிடத்திலில்லை; நீ இப்படிப் பிடிவாதஞ் செய்வதையிட்டு உன் அப்பருங் கவலைப்படுகிறார்; நேற்றிராத்திரி ஆகாரம் பண்ணும்போது உங்கள் அப்பர் உனக்கு இந்தக் காரியத்தையிட்டு ஆனபுத்தி புகட்டச் சொன்னார்; அவனினிலா, நீ ஒரேயொரு மகளென்ற ஞாயத்தினால் உன்மீது எல்லை கடந்த பட்சம் வைத்து நடக்கிறார்; உனக்கு நிச்சயித்திருக்கும் மாப்பிள்ளை புத்தியானவன்; உன் அப்பருடைய சொந்தச்சகோதரியின் மகன்தானே, அவன் என்ன படிப்பிற் குறைவா, அழகு ஆண்மைகளிற் குறைவா, உடைநடை பாவனை சீர்திருத்தங்களிற் குறைவா? அவன் ஆடவருமதிரும்பும் ஆண்பிள்ளையல்லவா; ஏன் அவனை அந்நியனாய் வெறுக்கின்றாய்; உனக்கொரு பொல்லாங்கு வந்தால் அவனுடைய இரத்தமும் அவனுக்கொரு பொல்லாங்கு வந்தால் உன்னுடைய இரத்தமுந் துடிக்குமல்லவா? அல்லாமலும் உன்னில் அவன் அதிகம் அன்பும் அருமையும் பாராட்டுகிறானென உன் அப்பர் பலமுறையுஞ் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்; இப்படியெல்லாம் எங்கள் சொந்தத்தில் மாப்பிள்ளையிருக்க, அந்த மாப்பிள்ளையை விட்டு வேறு எதுஞ் சிந்தனை செய்யலாமா? கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய் தேடுவாரும் ஊரிலுண்டோ மகளே; இந்தச் சஞ்சல புத்தியை இன்றோடு விட்டுவிடு, சிவநாதன் அருமையான குணமுள்ள பிள்ளை அவனையே நீ கல்யாணஞ் செய்தால் உன் வாழ்வுக்கும் நன்மையாகும்; பெற்றோர்களாகிய எங்களுக்குஞ் சந்தோஷமாகும்; அயலட்டத்திலுள்ளவர்களும் அது முறைதான் என்று சொல்லிப்பாராட்டுவார்கள்" எனப் பரிந்து சொன்னாள் தாயாகிய பெரியநாயகி;

### "நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை"

தாய் சொன்னவைகளை யெல்லாம் அவதானத்தோடு கேட்டுக்கொண்டிருந்தவளாகிய விசாலாட்சி தன் அன்னையைப் பார்த்து, 'அம்மா, என்னை வித்தியாசமாக விளங்கிக் கொள்ளாதீர்கள்; வேறு எந்தக் கருமத்திலும் என் பெற்றோர்கள் சொல்லைத் தட்டி நடக்கமாட்டேன்; இந்த விஷயத்திலும் நான் உங்க ளெண்ணத்திற்கு மாறாக இன்னொருவரை விவாகஞ் செய்ய விரும்பினேனென்றால் நீங்கள் என்னைக் குறை சொல்லலாம்; அப்படியான சிந்தனை என்னிடத்தில் இல்லை; விவாகமின்றிப் பிழைபடாமல் வாழமுடியாதென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; அப்பர் சுவாமிகளின் தமக்கையாராகிய திலகவதியார் முதலிய சில உத்தமிகள் அப்படியான தூய வாழ்க்கையைக் கைக்கொண்டொழுகினார்களெனப் படித்திருக்கிறோம்; அந்த உத்தமிகள் சர்வ உலக நாயகராகிய பரமசிவனையே தமக்கும் மேலான நாயகராகக் கொண்டு தொண்டு பூண்டொழுகி உய்தியடைந்தனர். மனத்துக்கு ஒவ்வாத கணவனோடு கூடி வாழுவதைக் காட்டிலும், நம் தலைவிதி இதுதான் என்று எண்ணிக்கொண்டு பத்தி நெறியிற் காலத்தைப் போக்கலாமென்று நினைத்தேனேயொழிய என்னைப் பெற்று வளர்த்த அருமையான அன்னையே, உங்கள் சொல்லைத்தட்டி நான் நினைத்தபடி வேறு விவாகஞ் செய்யத் துணிந்தேனென்று எண்ணாதீர்கள்" எனக் கண்களில் நீர்ததும்பப் பரிவுடன் பகர்ந்தாள். பிள்ளை இப்படிச் சொல்லக் கேட்ட தாயும் மனம் பதைபதைத்து "நான் பெற்ற கண்ணே, நீ கலங்க வேண்டாம், அந்தப் பிள்ளையைக் கல்யாணஞ் செய்வது உனக்கு விருப்பமாயிருக்குமென்றெண்ணியே உங்கள் அப்பரும் நானும் இந்தக் காரியத்தில் தலையிட்டோம், உனக்கு அந்தச் சம்பந்தம் இஷ்டமில்லையானால் நானும் சம்மதப்படேன். உங்கள் அப்பரும் உடன்படார்; ஆனால் உங்கள் சம்பந்த விஷயமாக உண்டான பேச்சுக்கால் நேற்றின்று தொடங்கியதல்ல; நாட்பட்டதாய் விட்டது; இனி இந்தக் காரியத்தில் மாறுபட்டுச் சொன்னால் மாப்பிள்ளையும் மாப்பிள்ளை பகுதியாரும் என்ன விபரீதம் நினை

(தொடர்ச்சி ௫-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயமும் பிற்காலமும்

(திருமயிலை: திரு. சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் சைவ மகாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு)

(முற்றொடர்)

வேதாகமங்கள் உயிரென்றும் புராணங்கள் உடலென்றும் கூறுவர். உடலானது உயிருக்குத் துணையாகி இன்பம் பயப்பதுபோலத் துன்பத்தையுங் கொடுக்கின்றது. உடல் நோய் வாய்ப்படும்போது, அதனால் வருந் துன்பத்தை அநுபவிப்பது உயிரேயாம். அதுபோல புராணங்களினாலே சமய நூல்கள் துன்புறுகின்றன. தூய மலை நீரிலிருந்து வரும் காவிரியாறானது செந்நிறமாய்க் காணப்படுகின்றது. அது வரும்வழியில் உள்ள பொருட்களுள் தன்னோடு சேரத்தக்கவை யாவற்றையும் அள்ளிக்கொண்டு வருகின்றது. அதுபோல நந்தியம் பெருமானிலிருந்து தோன்றிய புராணங்கள் தூயனவாயினும் அவைகள் பலர்வாய்ப்பட்டு நம்மை அடைந்தனவாதலின் அவர்களுடைய பொருளையுங் கருத்தையும் வாரிக்கொண்டே எம்மிடம் வந்து சேர்ந்தன. ஆதலால், புராணங்கள் அறிஞர்களால் ஆராயப்பட்டுத் தொடக்கத்திலுள்ள தூய்மையை எய்தும்போது எம்மவர்களால் வெறுக்கப்படமாட்டா. புறச் சமயத்தார் அவற்றைச் சுட்டிக்காட்டி எம்மவரைத் தமது சமயத்துக்கு இழுக்கமாட்டாமற் போவர். இப்போதுள்ள வடமொழிக் கந்தபுராணம் கச்சியப்ப சிவாசாரியர் செய்தருளிய கந்தபுராணத்தோடு சிற்சில இடங்களில் முரணுகின்றது. இம்முரண்கள் அவருடைய காலத்தின் பின் ஸ்காந்தத்திற் புகுந்தனவோ அதற்கு முன் புகுந்தனவோ தெரியவில்லை. முன் புகுந்தவையாயின் கச்சியப்பர் தமது மெய்யறிவாலறிந்து அவற்றைத் திருத்தினர் போலும். வேதாகமங்களோடு முரணும் புராணக் கொள்கைகளை நாம் கடிதல் வேண்டுமென்ற கருத்தையுடைய பிரமாணமொன்று நாவலர் பெருமானால் பெரியபுராண சூசனத்தில் எடுத்தாளப்பட்டிருக்கிறது. (தில்லைவாழந்தணர் புராணம்) அன்றியும் சிவபுராணங்களல்லாதவை சைவநூல்களல்லவென்பதையும் சிவபுராணங்கள்தாமும் அறிஞர்பாற் சென்று கற்றாலன்றி விபரீதப் பொருளைத் தரத்தக்கவைகள் என்பதையும் யாவரும் அறியச் செய்தல் எமது கடனாகும். கோயில்களிலே பொதுப் பெண்களின் நடனத்தைக் களைதல் சைவ வளர்ச்சிக்கு இன்றியமையாதது; இவர்களுடைய நடனம் வேற்றிடங்களில் அதிகமாக நடைபெறுவதால், கோயில்களிலே இவர்கள் நடிப்பதைப் பார்க்கும் தாகம் குறையும். அது குறைய அவர்கள் அங்கு நடித்தலுங் குறையும். விவாகங்களும் வேறு கொண்டாட்டங்களும் கூத்துக்களுமே இவர்களுக்குரிய இடங்களாம். விவாகங்களுக்கு இவர்களை அழைத்தல் நன்றென்று நான் சொல்ல வரவில்லை. கோயில்களில் நடிப்பதிலும் வீடுகளில் நடிப்பது நன்று என்று மாத்திரம் சொல்லுகின்றேன். அம்மைபால் குத்துவது உடம்புக்கு நல்லதன்றாயினும் அம்மையால் வருந் துன்பத்திலும் நன்றென்றாற்போல. கோயில்களிலே ஆடுகளைப் பலிசெய்தலின் ஒரு நோக்கம் அவற்றை விலைப்படுத்துதல். இந்தியாவிலே சில இடங்களிலே ஆயிரக்கணக்கான ஆடுகள் கொல்லப்படுகின்றன. அங்கு ஆட்டுத்தோல் வாங்குதற்கே பெருந்தொகையினர் போகின்றனர். இதை நீக்குதற்குக் காலத்துக்குக் காலம் ஆட்டுச் சந்தைகள் வைத்து அவற்றை விலையாக்க வேண்டும்.

சைவ சமயத்தை வளர்க்க வந்த சபைகள் தேவர்களது கால அளவையைக் கைக்கொள்ளுதலினாலே தேவர்களல்லாத எம்மனோர்க்குப் பெரும் பயன் பயக்கின்றில. ஒரு தொழிலுக்கு ஏற்பட்டவர்கள் அதை நாள்தோறும் செய்தலே முறையாகும். அப்படியின்றித் தேவர்களுக்கு ஒரு தினமாகிய ஒரு வருடத்திற்கு ஒரு முறை மாத்திரம் தொழில் செய்யக் கடமைபூண்டது வருந்தத்தக்கது.

உலகத்திலே சைவமொன்றுதான் பிரசாரமின்றி வாழ்கின்றது. ஜர்மனி, இத்தலி, ருஷியா, ஜப்பான் ஆகிய தேசங்கள் சண்டைக்குவேண்டிய ஆயுதங்களையே செய்தபோது இங்கிலாந்தும் அமெரிக்காவும் சண்டைக்குரிய ஆயுதங்களின்றியிருந்தன. இப்போது உலகம் கலங்கிக்கொண்டிருக்கும் இப்பெரிய யுத்தமும் Dunkirk உம் Pearl Harbour உம் சிங்கப்பூரும் இதன் பயனாம். மற்றைய சமயங்களெல்லாம் போருக்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்து போர் செய்யும்போது நாம் சமாதானப்பேச்சோடு நிற்கின் எமது நிலை எவ்வாறாகும்! வட இந்திய கல்விமான்களால் கொண்டாடப்பட்டு வருவதாகிய வேதாந்தம் எனப்படும் மாயாவாதம் ஐரோப்பா அமெரிக்க கண்டங்களிலுள்ள தத்துவ சாஸ்திரிகள் யாவராலும் அறியப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலுள்ளதாகிய சைவத்தை அந்த இடங்களுக்குக் கொண்டுசென்ற கல்விமான்களுமில்லை, நூல்களுமில்லை. மேல்நாடுகளுக்குப் போகவேண்டாம். சைவநாட்டிலே சைவத்தை அறியாத சைவர்களுக்காவது சைவத்தை அறிவுறுத்த வேண்டாமா? சைவ சபைகளும் சைவப் பள்ளிக்கூடங்களும் இதைத் தமது முதற் கடனாகக் கொண்டால், பிற்காலத்திலே சைவம் ஓங்கி வளரும். ஆயினும் சைவ சபைகளும் சைவப்பள்ளிக்கூடங்களும் சைவப் பெற்றோரும் பிற்காலத்திலே தமது கடமைகளைச் சரிவரச் செய்வார்களா என்பதை அறுதியிட்டுக் கூறுவதே எனது கடனும். இன்னது செய்தால் இன்னது ஆகும் என்பது சைவத்தின் பிற்காலத்தைக் கூறுதலாகாது. அது எக்காலத்துக்கும் பொருந்துமாதலால் இக்கால நிலையை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு யான் கணித்த பிற்கால நிலையைத் தங்கள் ஆராய்வுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

பரம்பரைச்சைவத்துக்கு மாறான கட்சியினர் தொகையிலே குறைவாயிருத்தலால் சைவர்கள் அவர்களைப் பொருட்படுத்தாது சும்மா இருக்கின்றனர். ஆயினும் இவர்களுட் பலர் நாளுக்குநாள் அக்கட்சிகளிற் சேர்கின்றனர். இதனாலே இவர்கள் பலவீனப்பட அவர்கள் பலப்படுகிறார்கள். ஆதலால், இன்னும் சில வருஷங்களுக்குள் பரம்பரைக்கட்சியார் தம்மை அரண் செய்யத் தொடங்குவர். பரம்பரைச் சைவர் அநேக தவறுகளையெல்லாம் மூடிவைத்துக்கொண்டிருக்கிறார்கள். தம்மைப் பலப்படுத்துதற்கு அவர்கள் முதற் செய்ய வேண்டியது அவற்றை வெளியிட்டுக் களைதலாம். வேதாகமக்கல்வி, சைவக்கிரியைப்பயிற்சி, நல்லொழுக்கம், ஈசுரபத்தியாகிய இவற்றுள் எதிலாயினும் குறையுடையவன் ஆலயபூசை செய்தால் கடவுள் சாந்நித்தியமாகாரென ஆகமங்கள் வற்புறுத்துகின்றன என்... [illegible]

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரவர்களின் வாழ்க்கைவரலாறும் அவரது அரும்பணியும்

[க. இராமச்சந்திரன்]

(முற்றொடர்)

சென்ற பதினைந்து ஆண்டுகளாக சுவாமிகள் ஸ்ரீ அரவிந்தாச்சிரமத்தில் தனிமோன தவத்திலிருந்துகொண்டே தமிழ்ப்பணி செய்கின்றார். ஸ்ரீ அரவிந்தக்காந்தம் அடிகளை இரத்தினத்தமது திருவடி நிழலிலேயே இருக்கச் செய்துவிட்டது. பகவான் அரவிந்தரே அவருக்குப் புதுயுகக் கண்ணாய்விட்டார். தமது தரிசனத்தை ஆர்வத்துடன் கோரும் அன்பர்களுக்கு மிகவும் அருமையாகவே அடிகள் காட்சியளிக்கிறார். அவரது சந்நிதி மாத்திரத்திலேயே அவரிடம் செல்வோரின் மனம் எண்ணங்களாம் அலைகள் ஓய்ந்து உண்முகப்பட்டு புத்தியிலடங்க புத்தி இதயத்தில் ஒடுங்கி மௌன சாந்திநிலை ஏற்படுகின்றது. அவரது முகவிலாசத்திலே மாசுமறுவற்ற மகிழ்ச்சியும் அன்பு மலர்ச்சியும் அற்புதத் தெய்வக்களையுடன் சேர்ந்து மிளிர்கின்றன. அவருள்ளமர்ந்ததும் பரமபக்தியும், அளவற்ற ஆனந்தமும் சொல்லொணாச் சாந்தியும் நம்மைச் சூழ்ந்துகொள்கின்றன. இந்த ஆனந்தனுபவமானது வெறும் சொற்களிலடங்கும் தரத்ததன்று. அதனைத் தேடிச் சென்று கண்டு களித்தால் தான் விளங்க முடியும்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு இம்மூன்றும் தமிழர் ஒவ்வொருவனின் உள்ளமும், உயிர்ப்பும் உடலும் ஆக வேண்டுமென்பதே சுத்தானந்தப் பெரியாரின் பிரார்த்தனை. தமிழை ஆங்கிலத்திற்குச் சமமாக உலக மொழியாக்க வேண்டும். தமிழர் நாகரீகம் மேற்கையும் கிழக்கையும் ஆளவேண்டும், தமிழ்க்கலை நிலை உலகில் அரியணைமீது அமரவேண்டும். இம்மூன்றுமே அவரது அபேட்சை. இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவே இன்று அவர் தனிமோன தவஞ் செய்கின்றார். இவ்விதக் கலைகடந்த ஆர்வத்தை அவருள்ளத்திற் பொங்கியெழச் செய்த காரணத்தை யாமறிதற்கு அவர் அகக்கண்முன் தமிழ்த்தாய் மகா ஜோதியாய்த் தோன்றிய காட்சியை முதலில் விளக்கவேண்டும்.

காதொளிருங் குண்டலமும்
கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியு
மெல்லிடையில்
மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிர் பூந்தாமரையும்
பொன்முடிசூ
ளாமணியும் பொலியச்சூடி
நீதியொளிர் செங்கோலாய்
திருக்குறளைத்
தாங்கு தமிழ் நீடு வாழ்!

இக்காட்சியன்றோ திரும்பவும் தமிழ்த்தாய் காலத்தையும் இடத்தையுந் தாண்டி கீழ்க்கண்ட முறையில் ஓர் கற்பகத்தருபோல மனித சமுகம் முழுவதற்குங் கனி அளிக்கவேண்டுமெனனும் ஆர்வத்தை அவருள்ளத்தில் தூண்டிவிட்டது.

"நாவலரிசை யமுதிருக்க நமதாழ்
வார்
மொழியிருக்கச் சேக்கிழாரின்
பால்வடி செந்தமிழிருக்கக் கம
பச்சித்
திரமிருக்கப் பாலே போன்ற
ஞானத்திலமும் விளக்கும் நாயனார்
குறளிருக்க நமது நற்றாய்
காலத்தை வென்றோங்குவ கற்
பகம்போற்
கனிபெருகக் கண்டிடோமோ"

சுவாமிகள் இதுவரையில் எழுதிய நூல்கள் மாத்திரமே ஒரு வாசிகசாலைக்குப் போதுமானவை. ஏறக்குறைய 500 வசன நூல்கள் எழுதியிருப்பதுடன் பதினாயிரக்கணக்கான கவிகளும் புனைந்துள்ளார், இவற்றில் பெரும்பாலானவை இராமச்சந்திரபுரம் அன்பு நிலையத்தாரிடம் யுத்த நெருக்கடியால் ஏற்பட்ட காகிதப்பஞ்சக் காரணமாக கையெழுத்துப் பிரதிகளாகவும் 'ரைப்'பண்ணப்பட்டும் இருக்கின்றன. தமிழில் மாத்திரமன்றி ஆங்கிலம், பிரஞ்சு, இத்தாலியம், லற்றின் முதலிய ஐரோப்பிய மொழிகளிலும் இந்தி, தெலுங்கு, சமஸ்கிரதம், வங்காளம் மலையாளம் முதலிய இந்திய மொழிகளிலும் அவர்க்கு நல்ல புலமையுண்டு. அவற்றிலும் நூல்கள் வரைந்துள்ளார். நூல் வரையுஞ் சக்தி குறித்து வேதவியாசர் பேரில் ஆராய்ச்சியாளர் சிலர் கொண்டிருந்த சந்தேகத்தை அடிகளின் அபாரசக்தி இன்று தீர்த்துவிட்டதெனலாம். "பாரதியார் ஒரு நாளுக்கு ஒருநூல் எழுத வல்லவர்" எனப் பாராட்டியுள்ளார் திரு சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார். அரை நாளில் இருநூல்கள் முடித்துக்கொடுப்பதை நேரில் காணும் சந்தர்ப்பம் எமக்கு சென்ற மார்கழி மாசத்தில் கிடைத்தது. எனவே, இராஜாஜியின் கூற்று அடிகளின் தற்போதைய அதிதீவிரத்தைக் குறித்ததல்லவென்பதை மாத்திரம் குறிப்பிட்டு மேற் செல்வோம்.

அடிகளின் யோகதரிசனமே 'பாரதசக்தி' யெனனும் அரும்பெரும் காவியமாய் பரிணமித்துள்ளது. அதற்கு அடுத்தபடியாயுள்ள "யோகசித்தி"யானது அவரது அத்யாத்ம யோகவாழ்வை எமக்கு படம்பிடித்துக் காட்டுவதுடன், "அறநூல்" "இன்பமாலை" ஆகிய இரண்டின் விரிவுரை போலவும் பொருந்தியுள்ளது. இன்னும் அச்சேறுமலிருக்கும் 'ஆத்மசோதனை' யெனனும் பெருநூல் யோகசித்திக்கு" ஓர் விரிந்த பாஷ்யமாக அமைந்துள்ளதென அறிகின்றோம். தமிழார்வமிக்கோர்க்கு "தமிழ்க்கனல்" மூலம் வீரஉணர்ச்சி ஊட்டியுள்ளார். தமிழில் கலைச்சுவையையும் இசைநயத்தையும் விரும்புவோர்க்கு 'கவிக்கனவுகள் என்றவிருந்தை அளித்துள்ளார். அருட்சுவை, பொருட்சுவையுடன், ஞானச்சுடரையும் தெய்வாவேசத்தையும் வேண்டுபவர்க்கு "பக்திப் பரவசம்" "சிதம்பரகீதம்" தேவகானம்" முதலியவற்றை அருளியுள்ளார். இவைகளெல்லாவற்றையுந் தாண்டி, உபநிடதங்களின் உள்ளத்தில் துள்ளிவிளையாடும் உணர்ச்சி தட்டினோர்க்கு 'ஸ்ரீ ரமண விஜயம்' என்னும் அரிய பொக்கிஷத்தைத் தந்துள்ளார். நமது பழைய நீதிநூல்களையும் சமயசாஸ்திரங்களையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து தம் சொந்த அனுபவத்தில் உணர்ந்த உண்மைகளை பண்டிதரல்லாதோரும் வெகுவில விளங்கும்வண்ணம், இனிய தமிழில் எளிய நடையில் எழுதருளிய தனிப்பெருமை சுவாமிகட்குரியது. "சிவஞானதீபம்" "திருமந்திரம்" 'திருக்குறளின்பம்', 'சிலம்புச் செல்வம்' முதலியன அத்தொண்டிற்கு ஒப்பற்ற உதாரணங்களாகும்.

"கவிதை என்பது உள்ளத்தில் ஊறிய இன்பவெள்ளம்; ஆயறகையில் பூத்த எழிலமலர்; அருளும், அழகும், ஒளியும், இன்பமுந் தாண்டவமாடும் கலையரங்கம். அருள்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிசை இயக்கமும்

## செட்டி நாட்டரசர் சேர். அண்ணாமலை செட்டியாரும்

[கொழும்பு அருள் தியாகராஜா]

இசையானது அண்ட கோடி சராசரங்கள் யாவற்றையும் தன் வயப்படுத்தும் தன்மை வாய்ந்தது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருதிணை உயிர்களும் இசையின் வயப்பட்டுகின்றன வென்று பல இடங்களிற் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்தில் தினைப் புனத்தைக் காக்கும் ஓர் பெண்மணியானவள், ஓர் தெள்ளிய சுனையில் நீராடியபின், பாறையின் மேல் ஏறி நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிகுந்த களிப்புடன் அந்நிலத்திற் குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில், தினைக்கதிரை உண்ணும் பொருட்டு, அவ்விடம் வந்த யானையொன்று, அந்தப் பெண்ணின் இசையிலே மயங்கிக் கதிரை உண்ணாமல் தான் கொண்ட பெரும்பசியை மறந்து மயங்கி நின்ற செய்தியொன்று சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் காணக்கிடக்கின்றது. எல்லாம் வல்ல பரமசிவனே இசையின் வடிவமாய் இருப்பவனென்றும் இசையிற் பிரியம் உடையவனென்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றார்கள்.

"வீணையோ டிசைந்து மிகுபாடல் மிக்க கையவன் காண்" என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம்.

"நாளு மின்னிசையாற் றமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன் தாளமீந்து அவன் பாடலுக் கிரங்கும் தன்மையாளனை" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைப் புகழ்கின்றார்கள். கண்ணபிரானது திருக்கரத்திலிருக்கும் வேய்ங்குழலினின்று எழுகின்ற இசை வெள்ளமானது தேவர்களையும், மானிடர்களையும், பசுக் கூட்டங்களையும், பறவைகளையும் இன்புறுத்துகின்றது. பெரியாழ்வார் திருமொழியிலே "முழுதற் சிறப்பு" கூறுகின்ற பாடல்கள் அவ்வின்னிசையின் அற்புதத்தை அழகுபெற மொழிகின்றன. மிகவுஞ் சிறந்த ஆங்கில கவிஞராகிய சேக்ஸ்பியர் (Shakespeare) இசையின் பெருமையை உணரமாட்டாதவரின் இயல்பைப் பின் வரும் செய்யுளால் தெரிவிக்கின்றார்.

"தன்னுளே இசையிலாதான்
றணியொலி யினையிலானுங்
கன்னலுண் டுருகான் வஞ்சங்
கடுஞ்சதி கேடுசெய்யப்
பின்னிடான் அவன் பிராணன்
இசைவுறு இரவுபோலக்
கொன்னர் இருளே வாய்ந்த
குணத்தினன் நம்பொணாதே".

சங்கீதம் மனிதரின் ஆத்மீக முற்போக்கிற்கு (spiritual progress) துணை செய்யுமென்பது பல அறிஞர்களின் முடிந்த கொள்கையாகும்.

இசையினுடைய பெருமையை ஓர்ந்த தமிழர் இசைத் தமிழை நாடகமாக வைத்திருக்கின்றனர். பண்டைக் காலத்துள் இயற்றமிழுக்கு இலக்கியமும் இலக்கணமும் ஏற்பட்டாற்போல, இசைத் தமிழ்க்கும், நாடகத் தமிழ்க்கும் ஏற்பட்டிருந்தன. சிலப்பதிகார உரையுள் அடியார்க்கு நல்லார் "இசை நுணுக்கம்" முதலிய பல இசை நூல்களைக் குறிப்பிடுகிறார். அவைகளெல்லாம் மறைந்து போயின. பதினைந்தாம் நூற்றாண்டில் தமிழ்நாடு விஜய நகர மன்னர் ஆட்சிக்குள்ளாயிற்று. அம்மன்னர் பிரதிநிதிகளாக வடவேங்கடம் முதல் தென் குமரிவரையில் பல வடுக நாயக்கர்கள் ஆண்டனர். இவர்கள் வடுக நாட்டிலிருந்து தங்களுடன் கருநாடக இசையையும் தெலுங்கு பாஷையும் கொண்டு வந்தனர். பின் வந்த மகாராஷ்டிர மன்னர்களும், கருநாடக இசையையும் வடமொழி, தெலுங்கு மொழிப் பாடல்களையுமே ஆதரித்தனர். அதனால் தமிழ் நாட்டின் இசை பரதேச உடை போர்த்துப் பரதேச உருவில் ஒருங்கி மறைந்தது. இக்காலத்தில் பற்பல இசை மன்றங்களும், இசைவாணர்களும் தோன்றியும் பண்டைய தமிழ்ப் பண் உயிர் பெற்றெழவில்லை.

"இத்தமிழ் நாடு முழுவதும் கந்தருவர்க்குரிய இசையே மலிந்ததென்பதற்கும், இவர் பாடலெல்லாம் இசையளவு கொண்டு யாக்கப்பட்டன வென்பதற்கும், அறிகுறியாக எத்தனையோ நூற்சான்றுகள் உள்ளன. கந்துகவரி, அம்மானைவரி, ஊசல்வரி, ஊசல் பாட்டு, முதலிய விளையாட்டுப் பாடல்களானும், பிழைக்காணம் (பிணப்பாட்டு) முதலிய இரங்கற் பாடல்களானும், இத்தமிழர் இன்பத்தையும் துன்பத்தையும் இசையான் வெளியிடும் இயல்பினரென்று உணரலாம்" என அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் பண்டித வான். ரா. இராகவையங்கார் அவர்கள் தாம் எழுதிய 'தமிழ் வரலாறு' முதற் றொகுதியில் கூறியிருக்கின்றார்கள்.

Annamalai Vniversity Tamil Series No. 2 Tamil Uaralaru Volume 1. Vide Page 80

"சிவாலயங்களிலும், விஷ்ணுவாலயங்களிலும் முறையே தேவாரத்தையும், திவ்யப் பிரபந்தத்தையும் பண்ணோடு ஓதிவரும்படி முற்காலத்தில் அரசர்கள் ஏற்பாடு செய்திருந்தனர், அப்பண் முறைகளைத் தெரிவிக்கும் நூலைத் 'தேவகானம் என்பர்" என்று காலஞ் சென்ற பெரியாரும் 'தமிழ்த் தாத்தா' எனப் போற்றப்படுபவரும், சங்கீத உணர்ச்சி மிக்கவரும், பல சங்கீத மகாநாடுகளிற் றலைமை வகித்தவருமாகிய டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இத்தகைய வனப்பும், பெருமையும் வாய்ந்த தமிழிசையானது தனது பண்டைப் பெருமை குன்றிப் பொலிவிழந்து தவிக்கின்றது. அதனை மணியாசனத்தி லிருத்தித், தொன்மையான உன்னத நிலையில் நிறுத்துதல் தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய கடனாகும். எமது தாய்நாடாகிய இந்தியாவிலே தமிழிசையானது இப்பொழுது சிறப்புப் புத்துயிர்பெற்றெழுந்திருக்கின்றது. இதற்கு மூலகாரணர் சிதம்பரத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகமென்னும் 'சிந்தா தேவியின செழுங்கலை நியமத்தை' ஏராளமான பணம் செலவிட்டு அமைத்தவரும், பெருங்கொடை வள்ளலுமாகிய நம செட்டி நாட்டரசர், சோ. அண்ணாமலைச் செட்டியாரவர்களேயாம். (Dr. Rajah Sir Annamalai Chettiar Avl.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு"
"தோன்றிற் புகழொடு தோன்றுக"

என்னும் வள்ளுவர் பெருமானின் மணிமொழிகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகவும், இலக்கியமாகவும் திகழ்பவர்கள். திருக்கோயில் திருப்பணிகள், திருமுறைப் பாடசாலைகள், உணவு விடுதிகள், மருந்துச் சாலைகள், தொழிற் கழகங்கள், பசுமடங்கள், குளங்கள், பூங்காக்கள் முதலிய பலவகையான அறநிலையங்களை அமைத்து உதவி யிருக்கின்றார்கள். தியாகராஜ வழிபாட்டுக் கொண்டாட்ட

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரவர்களின் வாழ்க்கை வரலாறும் அவரது அரும்பணியும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற உள்ளத்தில் அழகுத் தெய்வத்தைக் கண்டவனே கவி. அவன் பேச்சே பேச்சு, பாட்டே பாட்டு; அவன் செய்வதே செய்யுள்; அவன் கனவே கலை. இயற்கை அன்னைக்கு அவன் கவிக்கும் திருமுடியே கவிதை. அக்கவிதை உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுமா; உலகிற்குத் திருவாசகமாகும்" இந்த இலக்கணத்திற்கு இன்று ஓர் ஒப்பற்ற இலக்கியமாக விளங்குகின்றார் யோகி சுத்தானந்தர். அவரது ஆற்றொழுக்கம் போன்ற தெள்ளிய இன்பநடையை மேயகாலதேவியும் வேண்டி நிற்கின்றாள். கரிகை படித்துப் பேரிகை படிக்கும் பழைய பண்டிதக் குழுவினரும், அகராதியை முன்வைத்துக் கொண்டு செய்யுள் கோர்க்கும் புத்தகப் பூச்சிகளினதும் காலம் மலையேறிவிட்டது.

அடிகளின் தமிழ்ப்பணியைப் பாராட்டாத தலைவர்களோ, பேராசிரியர்களோ, வித்துவான்களோ, புலவர்களோ தென்னாட்டில் கிடையாது. காலஞ்சென்ற ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார், மகான் வ. வெ. சு. ஐயர், திரு. சிதம்பரப்பிள்ளை, டாக்டர் சாமிநாத ஐயர் முதலியோர்கள் அவரின் வருங்காலப் பெருமையை நோக்குடன் அறிந்து போற்றினர். இன்று தமிழ்த் தொண்டில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள ராஜா சேர். அண்ணாமலைச் செட்டியார் சேர். R. K. சண்முகஞ் செட்டியார் திரு. வி. க, திரு. டி. கே. சி, ராஜாஜி, திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, திரு. S. வையாபுரிப்பிள்ளை மகாமகோபாத்தியாய கதிரேசன் செட்டியார், வித்வான், காழி. சிவ. கண்ணுசாமி, கவிராஜபண்டிதர் கா. காசிவிஸ்வநாதையர், கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை முதலாய தமிழ்நாட்டுப் பிரமுகர்கள் அவரின் தூய யோக வாழ்வைப் புகழ்ந்தும் அவரது அரும்பணியைப் பாராட்டியும் வாசகமளித்து வண்ணமே இருக்கின்றார்கள். ஆனால், அப்புகழ் மாலைகளும் பாராட்டுதல்களும் மோனத் தவத்திலே ஆழ்ந்துள்ள அடிகளைத் தீண்டுவதில்லை. "இரவி, மதி, விண்மீன்" போல் ஒரு சத்திய மோனப் பரம்பொருள் வெளிப்பட்டே ஆனந்த சக்தியுடன் குழைந்து அதுவே லட்சியம்.

தற்போதைய உலக நெருக்கடி குறித்து இரண்டு ஆண்டுகட்குமுன் சுவாமிகள் அருளிய சில தீர்க்கதரிசன வாக்குகளைக் கீழே தந்து இக்கட்டுரையை முடிக்கின்றோம்:—

"பாரதபூமி உலகின் இன்பநிலையம்; சக்திநிலயம். அதன் வருங்காலம் மகத்தானது. உலகில் நித்தியானந்த ஜோதியை சத்தியதர்மயுகத்தை நாட்டவே பாரதசக்தி முயல்கிறது. அதற்காக மஹான்கள் தவம்புரிகிறார்கள். மேலை, அச்சுநெடுந்தொண்டுகளை விட மஹான்களின் தவ பலத்தினால் அற்புதமான பலன்கள் ஏற்பட்டுள்ளன. இப்போது நடக்கும் போர் அசுர பலங்களின் போர். இந்தப் போர் மேகம் நமது நாட்டில் தற்காலம் படர்ந்தாலும் அச்சமையில்லை. நமது தேசத்திலுள்ள பரமாத்ம சக்தி உலகைவிடப் பெரிது. அது அவதரிக்கிறது. அதன் வெற்றி நிச்சயம்.'

'உலகில் அசுரப்படைகள் மண்டிப்போயின. தர்மபலம் மங்கிப்போனது. இப்போது போரில் [illegible] அழிவரும் கொலைபாதகர்களைப் பயிரவளர்ப்பவர்கள். எளிய நாடுகளை நசுக்கிப் பிழிந்து இரத்தத்தை உறிஞ்சிக் கொழுப்பவர்கள் ஆகையால் அசுர பலங்கள் தம்முள் போராடி மடிகின்றன. அசுர ஆயுதங்கள் அவர்களையே வேட்டையாடுகின்றன. இதுகளைப்பிடிக்குவது போன்றது. இந்தப்போர் முடிந்த பிறகுதான் உலகம் புதுமையுறும். அதர்மம் அழிகிறது; தர்மம் இனி நிமிரும்.'

அடிகள் வரையும் நூல்களை காலதாமதமின்றி அச்சிட்டு வெளியிடும் பணியில் அயராது உழைத்து வரும் இராமச்சந்திரபுரம் அன்பு நிலையத்தாருக்கு எல்லாம் வல்ல பராசக்தியின் திருவருள் என்றும் உடைத்தாகுக.

## சைவமும் பிற்காலமும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடத்தில் எழுதியிருக்கிறார்கள். இவ்விலக்கணங்கள் யாவும் அமைந்த குருக்கள்மார் அரியரிலும் அரியர்கள். மற்றையவர்களுட் பெரும்பாலார் கோயில்களால் நீக்கப்படுவர். சிலர் குறைவுகளை நிறைவாக்குவர். அப்படியானவர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கவேண்டி வரும். அதற்கு அவ்வவ் வாலயங்களில் வழிபடுவோர் முறையாகப் பொருளுதவுவர். சற்பாத்திரமல்லாத பிராமணர்களுக்குப் பிதுர்த்தானம் முதலியன செய்வோர் நரகத்தை யடைவரென்று ஆகமங்கள் கூறுகின்றன. இக்காலத்திலே தானம் பெறுவோருட் பெரும்பாலார் அசற்பாத்திரரே. ஆதலாற் பிற்காலத்திலே சிராத்தங்களிலே பிராமணர் அழைக்கப்படுதல் அரிதாகும். பிற்காலத்திலே பெரும்பாலார் சிராத்தத்திலே செய்யும் தானங்களை ஆகம முறைப்படி நடத்தப்படுங் கோயில்களுக்குங் கொடுப்பார்கள். பரம்பரைச் சைவர் இவ்விஷயத்திலே தம்மைத் திருத்திக்கொள்ளப் பார்ப்பனப் பகைவர்கள் இவர்களோடு உறவாடி வேதாகமங்களை இறைவனூலென ஒப்புக்கொள்வர். இனி, பரம்பரைச் சைவர் வீண் கதைகள் நிறைந்திருக்கும் புராணங்களைப் புறக்கணிப்பர். சிவபுராணங்களிலுள்ள மறைபொருட்களையும் வெளிப்படுத்தி சைவத்தைப் பழைய நிலையில் வைப்பர். அப்போது நாஸ்திகரும் சைவராவர். கோயிற் குருக்கள் நலமிலா பூக்கமும் ஈசுரபத்தியு முடையவராகும்போது அவர் பொதுமக்களிற் நடனத்தைக் கோயில்களினின்றும் நீக்குவர். அப்போது புறச்சமயத்தவர்கள் எமது சமயத்தைத் தாக்குதற்கு வழியின்றி விலகுவர். அப்போது சைவமானது பகையின்றித் தனியாசு செய்யும். அதற்கு ஓர் அறிகுறி மேல காட்டிவிருகின்றது. சைவத்துக்கு உற்ற துணையாயுள்ளது வேதாந்தம். அதுசைவத்தை எடுத்துமைசமைத்தக்கது. "கடைக்கத் தகும்பாற்ற கேணமை யார்க்கல்லால் எடுத்துச் சுமப்பானை இன்று" என்ற உமாபதிசிவத் திருவாக்குக் கிணங்க, சைவத்துக்கு உற்ற கேண்மையாற் ஒன்று என்றுமுள்ளது. அது சாஸ்திர வாய்மை. இந்தியாவிலுள்ள "Indian Institute of Science" என்பது உலகமுழுவதும் அங்கீகரிக்கத்தக்க அநேக வாய்மைகளைக் காலத்துக்குக் காலம் கண்டுபிடித்து வருகிறது. மேல்நாட்டிலே புதிய உண்மைகள் பேரறிவாளர்களாற் காணப்பட்டு வருகின்றன. சைவத்தின் உற்றதுணை ஒரே சொல்லிற் சொல்லுமிடத்து ஆங்கிலத்திலே Science எனப்படும். அதன் வாய்மைகள் சைவ வாய்மைகளையே ஆமோதிக்கின்றன. அவைகள் உலகம் முழுவதாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியவை. ஆதலால் சைவவாய்மைகளும் உலகம் முழுவதாலும் ஏற்றுக்கொள்ளல் வரும். ஏகமனப்பதி உயர்ந்தோமாட்டு. ஆதலால் சைவத்தின் பிற்காலம் ஒளிப்பது என்று கூறலாம்.

## அட்லாண்டிக் சாசனத்தைத் திருத்தல்

### அவசியமென்று சோவியத் பழைய ஸ்தானிகரின் அபிப்பிராயம்

மொஸ்கோ, மே, 7—
ராய்ட்டரின் விசேஷநிருபர் பின் வருமாறு எழுதுகிறார்:—

அட்லாண்டிக் சாஸனத்தின் கொள்கைகள் திருத்தப்படவேண்டுமென்று யோசனை கூறி, முன்பு இத்தாலியில் சோவியத் ஸ்தானிகராக இருந்த எம். போரிஸ் ஸ்டீன் "யுத்தமும் தொழிலாளர் வர்க்கமும்" என்னுஞ் சஞ்சிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். மொஸ்கோ டெஹிரான் மகாநாட்டுப் பிரகடனங்கள் அட்லாண்டிக் சாஸனத்தைவிட ஒருபடி முன்னே சென்று விட்டன வென்று அவர் கூறிவிட்டு, ஆனால் துரிதமாக பரந்தலைடைந்து வரும் சர்வதேச நிலைமை சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்னைகளும் மொஸ்கோ பிரகடனத்திற் கூட அடங்கவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதானமான பிரச்னைகளை உதாசீனம் செய்துவிட்டு நிபந்தனையற்ற சரணாகதியைக் கண்மூடித்தனமாக அனுஷ்டிக்க முடியாதென்று அவர் கூறுகிறார். அட்லாண்டிக் சாஸனத்தின் பிரதான கொள்கைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்துமாறு அவர் யோசனை கூறியிருக்கிறார்.

### பாஸிஸ்ட் எதிர்ப்புச் சக்திகள்

ஜெர்மனிக்குத் தொண்டுபுரியும் நாடுகளிலுள்ள பாஸிஸ்ட் எதிர்ப்பு ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டவும், ஜெர்மனியை விட்டுப் பிரிந்துவிடுமாறு அவற்றைத் தூண்டவும், ஜெர்மனிக்கு எதிராக அவற்றைப் போராடச் செய்யவும் நடவடிக்கை எடுத்துக் கொள்வதுபற்றி விசேஷ கவனஞ் செலுத்தப்பட வேண்டுமென்று அவர் வற்புறுத்துகிறார்.

போலந்துக்கும் ருஷியாவுக்கும் மேற்கொண்டு உறவை ஏற்படுத்தச் சோவியத் ருஷியா பிரதான கவனம் செலுத்தி வருகிறது, பலம் வாய்ந்த ஒரு சுதந்தரப் போலந்து இருக்க வேண்டுமென்பதுதான் ருஷியாவின் அவா. ருஷியரின் நலவுரிமைகளுக்குப் பாதக மேற்படாத முறையிலும் போலிஷ் அரசாங்கத்தின் நியாயமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும், சோவியத் அரசாங்கத்தின் எண்ணம் இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

---

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

ஏப்ரல்மீ 19உ மானிப்பாயில் திரு. கனகசபை சுவாமிநாதன் (புரோக்கர்) தலைமையில் நடைபெற்ற ஷெ கோயில் வழிபடுவோரும் பக்தரும் ஆக உள்ளோர் பலரைக் கொண்ட கூட்டத்தில், ஷெ கோயிலைத் தருமசாதனச் சட்டத்தின்கீழ் ஒரு பொதுஜன தருமமாக் ஆவதற்கும் தெரிவு செய்யப்பட்ட ஒரு நிர்வாகசபையின் திட்டத்தின்கீழ் முகாமையை நடத்துதற்கும் வேண்டிய வழிவகைகளைக் கையாள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாக அறிகின்றோம்.

இத் தீர்மானத்தைச் செயலிற் கையாளுதற்குத் திரு. K. சொர்ணலிங்கமவர்களைத் தலைவராகவும் திரு. அமிர்தலிங்கத்தைக் காரியதரிசியாகவுங் கொண்ட ஒரு நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

## மகாத்மாவின் தேகநிலை

8-5-44

மகாத்மா காந்தியின் இருதயம் சென்ற இரவு தொடக்கமாக அற்பமாகத் தாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது; சென்றஇரவு அவருடைய உறக்கமும் பங்கப்பட்டதாம்; ஆனாலும் சில பத்திரிகைப் பிரதிநிதிகள் தம்மை வினவிய வினாக்களுக்கு அவர் உடனுக்குடன் பதில் சொன்னாராம். முகமலர்ச்சியோடு காணப்படுகின்றாராம். மகாத்மா பூரண ஆறுதலோடு இருக்க வேண்டுமென்றும் கடற்கரையில் வசித்தல் நல்லதென்றும் வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனராம்.

---

## சுட்டுக் கொல்லப் பட்டார்

இராணுவத்தைச் சேர்ந்த சார்ஜன் மஜராகிய மிஸ்றர். கிறனன் பேர்க் கென்பவர், அங்குள்ள ஜயசேகரா என்பவனுல் சுட்டுக்கொல்லப்பட்டாரெனவும் பொலிஸ் அதிகாரிகளாகிய மிஸ்ரர். O. டீ. ஸில்வாவும், மிஸ்ரர். P. A. டீ. S. செனிவரத்தினவும் கொலைநடந்த இடத்தைநேரிற் சென்று பார்த்தனரெனவும் பிரதிநீதிபதியாகிய மிஸ்டர். T. C. இராசரத்தினமவர்கள் விசாரணை செய்தாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

---

## 'கிளார்க்' 'கிளார்க்'கைக் கத்தியாற் குற்றியமை

அநுராதபுரத்திற் புகையிரதப்பகுதியிற் கிளார்க்காகக் கடமைபார்க்கும் திரு. M. வலலிபுரமென்பவரை அங்குதானே கிளார்க்காகக் கடமை பார்க்கும் திரு. V. செல்வநாயகமென்பவர் கத்தியாற் குற்றியபடுத்தினுரென் அந்த நீதிதலத்தில் வழக்குத் தொடரப்பட்டது. குற்றிய இடம் அநுராதபுரத்துள்ள விவேகானந்தசாலைக்கட்டடம். விசாரணை இந்த மேமீ 29உ எனத் தவணையிடப்பட்டிருக்கிறது.

---

## செபாஸ்தபூர் ருஷியராற் பிடிக்கப்பட்டது

கருங்கடலிலேயுள்ள பிரதான துறைமுகப் பட்டினமாகிய செபாஸ்தப்பூர் ஜர்மனியருடன் கடுஞ்சமர் செய்து ருஷியாராற்பிடிக்கப்பட்டது.

---

## றூஸ்வெல்ற்றைக் கொல்லப் பிரயத்தனம்

அமெரிக்க பிரசாதிபதியாகிய மிஸ்ரர். றூஸ்வெல்ற் றென்பவரை ஹறல்ட் R. மேசன் என்னுமொருவன் கொலைசெய்ய எத்தனித்தவிடத்திற் பிடித்துச் சிறை வைக்கப்பட்டுள்ளானும்.

---

## தேகவியோகம்

புங்குடுதீவு கிழக்கு அம்பலவர் கண்ணையா அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் தம்மூரவரால் பெரிதும் விரும்பப்பட்டவருமாகிய திரு. நடராசா அவர்கள் சென்ற 6-5-44 ஞாயிற்றுக்கிழமை யன்று காலை 8 மணியளவில் கொழும்புமா நகரில் எதிர்பாராத விதமாக மரணமடைந்தனர் என்னுந் துக்கச் செய்தியை இங்கு தெரிவிக்க வேண்டியவர்களானோம். இறக்கும்போது இவர் வயசு 28 இவரைப்பிரிந்து வருந்தும் பெற்றோர் உற்றார் உறவினர் நண்பர் ஆகிய அனைவாக்கும் எமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## திருநெல்வேலியில் வாசிகசாலைத் திறப்பு

### தலைவர் பிரசங்கம்

யாழ்ப்பாணம் மே 8—
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருநெல்வேலி தெற்கிலுள்ள 'நேருசபா' ஆதரவின்கீழ் நேற்றைய தினம் சாயங்காலம் 6 மணியளவில் ஓர் இலவச வாசிகசாலையும் புத்தக சாலையும் திறப்பதற்காக ஒரு பொதுக் கூட்டம் யாழ்ப்பாணப் பட்டின சபைத் தலைவர் திரு. க. பொன்னம்பலம் தலைமையில் ஆரம்பமாயிற்று.

தலைவர் திரு. பொன்னம்பலம் தமது முகவுரையின்போது கூறியவற்றின் சாரம் வருமாறு:—

"மேல்நாடுகள் போன்று எம் நாட்டிலும் இத்தகைய வாசிகசாலைகள் ஒவ்வொரு கிராமத்திலும் தொடக்கல் வேண்டும். வாசிகசாலைகள் எல்லோரையும் கல்வியறிவிற் சிறந்தவராக்கும். பொதுஜன வாக்குரிமையை இக்காலத்தில் நன்கு வாக்குச் சீட்டின் பெருமதி எத்தகையது எனத் தெரியாது நடப்பதனுல் காட்டிறது அநேக கஷ்டங்கள் உண்டாகின்றன. அதனைத் தடுப்பதற்கு உரிய வழிவகைகளில் வாசிகசாலைகள் அறிவை ஊட்டுவதற்குச் சிறந்த மார்க்கமாகும்.

நியாயதுரந்தரர் திரு அ. நாகலிங்கம் பேசியதாவது:—

ஒரு காலத்தில், யாழ்ப்பாணத்திற்கு நற்பெயர் தேடிக்கொடுத்த ஞானப்பிரகாச சுவாமிகள் அவதரித்த இப்புண்ணிய இடத்திலே இப்போதுள்ள வாலிபர்கள் இவ்வாசகசாலைகளைத் தொடக்கி யிருப்பது எவ்வளவு சந்தோஷமான காரியம். துட்டகைமுனு படைக்கு ஆள் திரட்டியவாறு ஒருவன் 10 பேரைச் சேர்த்தவாறு இங்கிருக்கும் ஒவ்வொருவரும் பத்துப் பத்துப் பேரைச் சேர்த்தவாறு இங்கிருக்கும் ஒவ்வொருவரும் பத்துப் பத்துப் பேருக்கு இலவசக் கல்வி யூட்டுதல் வேண்டும் என்னும் நியதியைக் கைக்கொண்டால், ஒரு குறித்த கால எல்லைக்குள் 100 க்கு 98 வீதம் அறிவாளிகளாய்ப் பிரகாசிப்பார்கள். எத்தர்மத்திலும் சிறந்த தர்மம் வித்தியா தர்மமே. அவ்வித்தியா தர்மத்தைத் தொடங்கக் கூடியவாறு நாம் செய்யவேண்டிய பணி இதுவெனக் கைக்கொண்டு நடத்தல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

அதன்பின், வைத்தியக்கலாநிதி திரு. M. பாலசுந்தரமும் அகில இலங்கைச் சுருட்டுத்தொழிலாளர் சங்க காரியதரிசியும் பேசினர்.

பின்னர் தலைவர் திரு. பொன்னம்பலம் வாசிகசாலைக்குச் சென்று கரகோஷத்தினிடையே எழுந்து வாசிகசாலையிலுள்ள புத்தகங்கள் நிறைக்கப் பெற்றிருக்கும் அலுமாரிகளின் கதவைத் திறந்து புத்தகசாலையைத் திறந்து வைத்தார்.

ஈற்றில், திரு. எஸ். குலேந்திரன் தலைவருக்கும் சொற்பொழிவாளர்க்கும் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

---

## கால் நடைகள் வெட்ட மறுப்பு

இரத்தினபுரி, மே, 8

இரத்தினபுரிப் பட்டினசபை மார்க்கெற்றில் இறைச்சி விற்பவர் கால்நடைகள் வெட்ட மறுத்துவிட்டார். பொதுஜனப் பாதுகாப்புக் கொம்மிஷனரின் புதிய சட்டத்திற்குப் பின் கட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பது தமக்குக் கட்டாதென்றும், அதனுல், தாம் இம்மையிலே கைவிடுவதாகவும் கூறுகின்றனர்.

## உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ப்பரோ நான் அறியேன்; மேலும் இரண்டு குடும்பங்களுக்கு மிடையே தீராப் பகையும் வந்து நேரும்; இவைகளை யிட்டுத்தான் யோசிக்கிறேன்; மகளே, கேட்கிறேனென்று குறை யெண்ணாதே, தாயையொளித்தொரு சூலில்லை யென்று சொல்லுவார்கள்; ஆனதால் எனக்கு மறைக்க வேண்டாம், பயப்படாமல் உள்ளதைச் சொல்லு, அந்த ஆளில் என்ன பிழைகண்டு நீ கல்யாணஞ் செய்ய மறுக்கிறாய்" என்று ஆவலுடன் கேட்டாள். "அம்மா, நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை யென்பது நிசம்; அந்த ஆளிடத்து ஏதுங்குறை யிருந்தாலும், நான் ஒரு குமர்ப்பெண். அதை வாய்விட்டுச் சொல்லுவது முறையல்ல: அப்படிச் சொல்லுதல் ஒருவரைக் காரண மில்லாமல் தூற்றுவதாகும்; ஆனதால் அவருக்கு மனைவியாக எனக்குப் பிரியமில்லை யென்று சொல்லிவிட்டால் அதனுல் எவர்க்கும் எவ்வகையான குறையும் வராது" என்றாள் விசாலாட்சி. "நீ சொல்வது சரிதான மகளே, ஆனல், நீ பிறருக்குச் சொல்ல வேண்டாம், உன்னை பெற்றவளாகிய எனக்கு மாத்திரஞ் சொலலிவிட்டால, நான அந்த ஞாயத்தை என்னளவில் வைத்துக்கொண்டு, பிறருக்கு வேறு ஞாயஞ் சொல்லிவிடுவேனே; நீ சொல்லும் நியாயத்தை உன் பிரியமில்லாமல் உங்கள் அப்பருக்குத்தானும் வெளியிடமாட்டேன், என மகள்மேலாணை" என்று ஆணையிட்டாள் பெரிய நாயகி. "ஐயோ, இது என்ன பரம சங்கடமாக விருக்கிறதே, சொன்னாலும் பிழை சொல்லாவிட்டாலும் பிழையாகுமே, இதற் கென்ன செய்வேன" என்று தன்னளவிற் கவலைப்பட்டாள் விசாலாட்சி.

(வரும்)

---

## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 196ம், 197ம் இலக்க இன்சோல்வன்சி வழக்கில் பிறப்பித்த கட்டளைப்படி பின்வரும் ஆதனங்கள் 1944ம் ஆ வைகாசி மாசம் 20ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வக் காணிகளுக்குள்ளே நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணைமேற்கிறை, பள்ளுவிலித்தோட்டம், நி. பா. $6\frac{1}{4}$ வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிரும், இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு ரேட்டு, மேற்கு கதிரேசு முத்துக்குமாரு பெண் காமாட்சியின் ஆதனம். இதிற் சொரிபலாய் அரைவாசி.

(2) ஷை இறை திருவளர் திடலும் சீமாதிடல், நெ. பர. 8. வீடும், வான் செய்பயிர்களும், எல்லைகிழக்கு கணபதிப்பிள்ளை துரையப்பாவினுதனம், வடக்கு சண்முகம் கைம்பெண் தங்கமுத்துவும் மறுபேரும், மேற்கு ஒழுங்கை, தெற்கு கணபதியார் விசுவலிங்கமும் பெண்ணும். இதிற் சொரிபலாய் அரைவாசி.

(3) ஷை இறை பள்ளுவிலி தோட்டம், நெ. பர. 5. வீடும், வான்செய்பயிர்களும், எல்லை தெற்கு விசுவலிங்கத்தினுதனம், வடக்கு நல்லதம்பிக்கும் மறுபேருக்கும், கிழக்கு எம். சீ. தண்டாயுதபாணிக்கும் மறுபேருக்கும், மேற்கு ஒழுங்கை. இவையனைத்தும்.

(4) ஷை இறை பிராயடி, நி. பா. $1\frac{1}{8}$ கிணறும, வான்செய் பயிர்களும், எல்லை கிழக்கு சுலுத்தான் பெண் செயினும்மாவுடைய ஆதனம், வடக்கு பக்கிர் அப்துல்காதர் சாகுல் கமீதுக்கும் பங்காளருக்கும், மேற்கு ஒழுங்கை, தெற்கு ரேட்டு. இவையனைத்தும்.

M. K. சங்கரப்பிள்ளை,
அசைனீ.

18, 1ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 20-4-44.
(Mis. 28. 11-5-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருட்டு விலையை அதிகரிப்பதற்கு எதிர்ப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

சுருட்டுத்தொழிலை நம்பி இருபத்துமூன்று லட்சம் ஜனங்கள் சீவிக்கின்றார்கள். அவர்களது ஜீவனார்த்தத்துக்குரிய தொழிலைச் சுயநல நோக்கங்கொண்டு பாழ்படுத்தக் கூடாது. தொழிலைப் பாழ்படுத்தக் கூடிய புகையிலைகளை உபயோகித்துச் சுருட்டை மானமில்லாததாகச் செய்வது யாவரும் தன் கையால் மண்ணை வாரித் தனது தலையிற் கொட்டுவது போன்றதாகும். சுருட்டுகளை அதிக விலையேற்றி விற்பதால் சுருட்டு விற்பனையாகாது போய்விடும். அதனால் சுருட்டுத் தொழிலாளர்கள் வேலையில்லாது திண்டாடவேண்டியிருக்கும். தொழிலாளர்கள் மட்டுமின்றி அத்தொழிலாளர்களுக்கு முதலாளிகளாயுள்ளவர்களும் திண்டாடவேண்டியிருக்கும்.

அதன்பின், தனாதிகாரி திரு. என். இராமலிங்கம் வருங்காலத்தில் தொழிலாளர்களாகிய நாங்கள் எமக்கு வரும் கஷ்டங்களை முன்கூட்டியே அறிந்து அதற்குத் தக்க நடவடிக்கைகளைக் கைக்கொள்ளல் வேண்டும் எனப் பொருத்தமாகப் பேசினார்.

பின்னர்ச் சங்கத்தின் வரவுசெலவுக்கணக்கு வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

### தீர்மானம்

சுருட்டுவிலை வரவரக் கூடிவருவதால் சுருட்டு விற்பனையாதல் குறைந்து தொழில் கெட்டுப்போவதுடன் தொழிலாளர்களுக்கும் அதனை நடத்துகிறவர்களாகிய முதலாளிமார்களுக்கும் நஷ்டமேற்படுமென்று இந்நிர்வாகசபை கவலைப்படுவதால் முதலாளிமார் சுருட்டின் விலையைக் கூட்டுவதைவிட்டு அதற்குக் காரணமாகிய புகையிலையின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கைக்கொள்ளுமாறு இச்சங்கம் முதலாளிமார்களை வலியுறுத்துகின்றது" என்று தீர்மானம் சபையோரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை ஒவ்வொரு முதலாளிமார்களும் அறியவேண்டியது மிகவும் அவசியமாதலால் இதனை முதலாளிமார்களுக்கு அனுப்பவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் இத்தொழிலாளர் சங்கத்தின் ஆண்டு நிறைவுவிழா மிக்க விமரிசையாக இம்மாதத்திலேயே கொண்டாடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.


### தேவை

ஐக்கிய சங்கப் பண்டகசாலைக்கு மனேச்சர், கிளாக், விற்பனவுகாரன்.

மனேச்சர் காசுப்பிணை ரூபா 500.
ஆதனப்பிணை ரூபா 2000
கிளாக் காசுப்பிணை ரூபா 500.
விற்பனவுகாறன் காசுப்பிணை ரூ 100.

சம்பள விதம்

மனேச்சர் ரூ. 480—900 48/-
கிளாக் ரூ. 360—720 36/.
விற்பனவுகாறன் ரூ. 240—480 24/.

யுத்தநிதிப்பணமும் அரசினர்விதத்தின்படி கொடுக்கப்படும்.

சாவகச்சேரி தென்மராட்சி ஐ. சங்கப் பண்டகசாலைக் காரியதரிசிக்கு 1944 வைகாசி 15ந் திகதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்கள் சேரவேண்டும்.

(Mis. 26. 11-5-44)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி மே 12

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-30 பநர் பி ஸி பொன்னம்மா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 காஞ்சீவரம் கோவிந்தபிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2—05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 பநர் பி ஸி பொன்னம்மா பாட்டு 5-40 டிரான்ஷர்ப் கோஞ்சீவரம் கோவிந்தபிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 உள்ளூர்ச் செய்திகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வீரங்கனை நாடகம் 8 செம்பொன்னூர் கோயில் எஸ் ஆர் கோவிந்தசாமிபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10-30 முடிவு.

### சனி மே 13

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருப்புகழ் மணி† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திரைகானம்† 8-50 நயாதாரு† 9 முடிவு

1 லால்குடி ஆர் நீலமேகம்பிள்ளை வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சீதா ஜனனம்† 2 தமிழில் செய்திகள் 2-05 டி பச்சையப்பா பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 டி பச்சையப்பா பாட்டு 5-40 அழகர் கலம்பகவிளக்கம் 6 லால்குடி ஆர் நீலமேகம்பிள்ளை வயலின் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 வாணிபப் போக்கு பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 9-15 ஸி ஹொன்னப்பபாகவதர்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கர்நாடக ராகங்கள் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### ஞாயிறு மே 14

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 டி ஆர் ராஜகுமாரி† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 முரைக்கதம்பம்† 9 முடிவு.

12 கதம்பம்† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 எஸ் கே வெங்கடாமணன் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 என் ஸி வஸந்தகோகிலம்† 2-30 முடிவு.

மாலை 5 எஸ் கே வெங்கடாமணன் பாட்டு 5-0 தேவாராதனை 6 ஆர் வி சுப்பிரமணியன் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 உலக அரசியலில் இஸ்லாம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 விஸ்வேஸ்வரம் மாதரூட்† 8 கே எஸ் வெங்கடாமய்யா வயலின 9-20 ஆங்கிலத்திலசெய்திகள 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 ஆங்கில நிகழ்ச்சி 10 இசைவேளை 10-30 முடிவு.

### திங்கள் மே 15

காலை 7-45 சீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி எஸ் ராகவன் நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி எஸ் லலிதா பாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 டி எஸ் ராகவன்நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 பி எஸ் லலிதா பாய் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி 8 செம்மை வைத்தியநாத பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புதியஇந்தியாவின் பிரச்னைகள் 10-5 இசைவேளை† 10-30 முடிவு.

## தமிழ் இசை இயக்கமும் செட்டிநாட்டரசர் சேர். அண்ணாமலைசெட்டியாரும்

4ம் பக்கத் தொடர்ச்சி

இசைத் திருவிழாவின் ஆரம்பத்தில் 4-10-41ல் பின்வரும் அறிவுரைகளை யாமெல்லோரும் நன்கு சிந்திக்கும் வண்ணம் கூறியிருக்கின்றார்கள்,

"தமிழிசை வளர்ச்சிக்காக யான் அளித்த நன்கொடையினால் தெலுங்குப் பாடல்களையோ வேற்றுமொழிப் பாடல்களையோ நீக்கவேண்டுமென்பது எனது நோக்கமன்று. எனது ஒரே விருப்பமானது, தமிழ்ப் பாட்டுக்கள் ஆக்குவதற்கும், பழந்தமிழ்ப்பாட்டுக்களை மலர்ச்சியடையச்செய்வதற்கும் ஓர் தனிப்பட்ட ஊக்கம் கொடுக்க வேண்டுமென்பதேயாகும். தமிழ் நாட்டு மக்கள், தமிழ்ப் பாடல்களின் மூலம் தாங்கள் இன்பத்தைப் பெறுதல் போல், தெலுங்கு அல்லது வேறு மொழிப் பாடல்களின் மூலம் இன்பமடைய முடியாதென்பதைத் தவிர, வேறு எக்காரணமுமில்லை."

"பொருள் விளங்கக் கூடிய பாடல்களைக் கேட்க நான் விரும்புகின்றேன். உணர்ச்சியோடும் பொருளோடும் பாடப்பெறும் தமிழ்ப்பாடல்களைச் செவிமடுத்து நான் தனித்த இன்பமும் உணர்ச்சியும் பெறுகின்றேன்."

இச்செட்டி நாட்டரசரவர்கள், தற்பொழுது சற்று ஆறுதல் பெறும்பொருட்டு, இலங்கையின் தலைநகரமாகிய கொழும்பிற்கு வந்திருக்கின்றார்கள். இவர் தமிழ்நாட்டிற்குச் செய்துள்ள நன்மைகளை யாரே எவ்வாறு மறக்க முடியும்? தமிழ்நாட்டினர் இவருக்குப் பலதலைமுறைகளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

யார்க்கும் காட்சிக்கு எளியரும், எவருடனும் இன்சொற்களையே அன்புததும்பப் பேசுகின்றவரும், இலங்கை அரசினரின் உயர்ந்த பல உத்தியோகம் வகிப்பவரும், பாஷாபிமானம், சமயாபிமானம் மிக்கவருமாகிய திரு. ச. கனகரத்தினமவர்கள் தமிழிசையை வளர்க்கும் பொருட்டு 'கொழும்பு வடிவேல் இசை மண்டபம்' எனனும் ஓர் சபையை, கொழும்பு ரேடியோ நிலைய அதிகாரி உதவியுடன் அமைத்திருக்கின்றார்கள். அதற்குச் செட்டிநாட்டரசர் அவர்கள் ரூபா (1000) ஓராயிரம் நன்கொடையாக உதவியுள்ளார்கள்.

தமிழிசையானது செட்டிநாட்டரசரவர்களின் 'ஊனிலுயிரிலுணர்வில்' கலந்து ஊறித்ததித்திருக்கின்றது. தமிழன்னைக்குச் சேவை செய்யும் பொருட்டுச் சர்வேஸ்வரன் எல்லா நலங்களையும் இவருக்கு அருள்வாளாக,


## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்


## கீதையின் உபதேசம்

"மனிதனுக்கு அவனது வாழ்க்கையிலே தைரியமுண்டாவதற்காகவே பகவத் கீதையானது சொல்லப்பட்டது. கீதை உபதேசத்திலிருந்து நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவெனில் நாம் நம்மால் செய்யக் கூடியதை நமது சுயநலத்துக்காக அல்லாமல் பிறருடைய நன்மைக்காகச் செய்யவேண்டும்.

"நமது மனத்தில் குழப்பம் ஏற்பட்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கும் சமயத்தில் நமது மனதைத் திடப்படுத்தி, சரியான வழியைக் காட்டப் பகவத்கீதையிற் பல விஷயங்கள் அடங்கியுள்ளன".

என்று இவ்வாறு டாக்டர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரவர்கள் "கீதையின் உபதேசம்" என்பதுபற்றிக் கொழும்பு விவேகானந்தசபையில் சித்திரை மீ 21 ந் திகதி வியாழக்கிழமையன்று செய்த உபந்நியாசத்தில் குறிப்பிட்டார்.

சபை மண்டபத்திலும் வெளியே தோட்டத்திலும் தெருவிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நிற்க இடமின்றிக் கூடியிருந்தனர். இவ்விதமான காட்சியை விவேகானந்தசபை சமீபத்தில் கண்டதில்லை என்று கூறலாம். ஏராளமான பெண்களும் கூட்டத்திற் சமூகமளித்திருந்தனர். கூட்டத்திற்குச் சபையின் உபதலைவராகும் அத்துவக்காத் திரு. ந. நடராசா அவர்கள் தலைமை வகித்து ராஜாஜியை வரவேற்றார்.

ராஜாஜி முதலில் இவ்வளவு கூட்டம் அன்பு மார்க்கசங்கத்தில் இருந்ததாயும் இந்த இரு கூட்டங்களையும் சினிமாப் படம் பிடித்து இந்தியாவில் காட்டினால் சமூக ஒற்றுமை முதலிய நல்லபலன் ஏற்படலாமென்றும் குறிப்பிட்டு மேலும் சொன்னதாவது:—

'பகவத்கீதையானது ஒரு யுத்தம் நடக்கும்போதுதான் கண்ணபிரானால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. இப்போது ஒரு யுத்தம் நடக்கின்றது; கீதை உபதேசமானது இறைவன் அருளிய மகத்தான உபதேசம். இந்த உபதேசங்கள் ஏற்பட்டகாலம் அநேக ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டது. நமது தற்கால வாழ்க்கைக்கு எவ்வளவு தேவைப்படுமோ அதைமட்டும் அனுமார் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சீதையைத் தேடிக் கண்டுபிடித்தாரோ அப்படியே கண்டுபிடித்துக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும்.'

ராஜாஜி மேலும் தமது சொற்பொழிவில் விவேகானந்தசபையார்சென்ற 40 வருடங்களுக்கு மேலாகச் செய்துவரும் அரிய சேவையினைப் பாராட்டி இங்குள்ள இந்துக்கள் அதனை மேலும்மேலும் ஆதரித்து வளர்க்கவேண்டுமென வற்புறுத்தினர். பின்னர்ச் சபையார் அன்னை கஸ்தூரிபாயின் ஞாபகார்த்த நிதிக்காகச் சேகரித்த ரூ. 660 கொண்ட ஓர் பணமுடிப்பு ராஜாஜிக்கு அளிக்கப்பட்டது. இதற்கு ராஜாஜி நன்றி தெரிவித்ததும் தேவாரபாராயணம் நடைபெற்றது.

— நடித

## 'ஆஸ்திரேலியாவுக்கு வாருங்கள்!'

### திரு. சர்ச்சிலுக்கு திரு. கேட்டின் அழைப்பு

லண்டன் மே 4—

ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டதற்குப்பிறகு கூடிய சீக்கிரம் திரு. சர்ச்சில் ஆஸ்திரேலியாவுக்கு வருமாறு ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி திரு. ஜான் கேட்டின் அழைத்திருக்கிறாரென்று "நியூஸ் கிரானிக்கல்" பத்திரிகையின் அரசியல் நிருபர் கூறுகிறார்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietcrs the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 11, May, 1944,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org